# செய்யிதினா இமாம் ஜஃபர் சாதிக் அவர்களின் மௌலிது தொடக்கம்

இதுவாகிறது உலக இரட்சகராக வந்துதித்த முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய கண் குளிர்ந்த பேரப்பிள்ளை செய்யிதினா இமாம் ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் புத்திரர் செய்யிதினா இமாம் பாக்கர் சாகிபு ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் அருமை மகனாக வந்துதித்த சிறப்பு பெற்ற இமாமுனா ஜஃபர் சாதிக் ரழியல்லாஹு அன்ஹு நாயகமவர்களின் - திருப்பெயரால் புகழ்வாய்ந்த மகிமை கஸீதாவாக இருக்கும்.

இதனை வெள்ளி, திங்கள் இரவுகளில் ஓதி வந்தால் நாடிய நாட்டங்கள் நிறைவேறும். இன்னும் ராத்திபு மஜ்லிஸுகளில் ஓதிவந்தால் இருதயம் துலங்கி இம்சை நீங்கும். ஷைத்தான் கபீது, ஜின்னு பிடித்தவர்களுடைய முன்னிலையில் ஓதினால் கார்மானம் உண்டாகி அவைகளின் உபத்திரவங்கள் நீங்கி நல்ல சுகம் கிடைக்கும்.

முக்கியமாகவே ரஜபு மாதம் 22ஆம் தேதியில் பூரியானோ, அல்லது இனிமையான உகந்த வஸ்துக்களோ, துப்புரவாகச் செய்து ஒரு இடத்தை துப்புரவுபடுத்தி அந்த இடத்தை அத்தர், பன்னீர், புஷ்பம் முதலியன கொண்டு பரிமளப்படுத்தி, அதில் சுத்தமான புதிய மண் பாத்திரத்தில் அந்மத இனிமையான பலகாரங்களை வைத்து கொமஞ்சார், அகர் கட்டை, சந்தனக் கட்டை முதலியதைக் கொண்டு புகையிட்டு ஊதுபத்தியும் கொளுத்தி வைத்து, இந்த கஸீதாவை ஓதி பாஞ்ச்பாக் - அதாவது நபிநாயகம், பாத்திமா நாயகி, அலி கர்ரமல்லாஹு வஜ்ஹஹு, இமாம் ஹஸன், இமாம் ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹுமா ஆகிய இப்புனித நாயகங்களுடைய பேராலும் ஹழ்ரத் இமாம் ஜஃபர் சாதிக் நாயகம் பேராலும் ஹதியா செய்து, பாத்திஹா ஓதி தவ்லத் என்னும் சீமான் தனமுண்டாக வேண்டுமென்று துஆக் கேட்டால் அப்படியே உண்டாகும் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை.

இப்படியே செய்யிதினா இமாம் ஜஃபர் சாதிக் நாயகம் செய்யுமபடிக்கு முன் குறித்த தேதியில் உத்திரவு செய்து அவ்வுத்திரவிற்கிணங்கி ஓர் விறகு வெட்டி விற்பனை செய்யும் வியாபாரியின் மனைவி நடத்திய பாத்திஹா விர்துகளின் பரக்கத்தைக் கொண்டு, அந்நிய ஊர் சென்று பொருள் கிடைக்காமல் அலைந்து, திரிந்த அன்னவளின் புருஷனுக்கு திடும்பிரவேசமாக புதையல் பொருள் கிடைத்து, செல்வத்துடன் வந்து சேர்ந்து, சுகித்து வாழ்ந்தது நிச்சயம்.

இந்தப்படி குறித்த தேதியில் எத்தனையோ பேர்கள் செய்து சீமான்தனம் பெற்று ஜெயப்பலன் அடைந்து இருக்கிறார்கள் என்பது திண்ணம். அந்த உகப்பில் நம்மனைவரும் சேர்ந்து அனுகூலம் பெற நாயன் நல்லுதவி செய்வானாகவும் ஆமீன்.

இந்த கீழ்கண்ட பைத்தை மஜ்லிஸில் உள்ள யாவதும் ஒவ்வொரு பைத்துக்கு முன்னாலும் ஓத வேண்டியது.

يَا رَبُّ مَلِكِ الْوَافِقْ    صَلِّ لِطٰهَ الصَّادِقْ

مَادَامَ مَدْحُ الشَّائِقِ    لِاِمَامِ جَعْفَرْ صَادِقْ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

## مَنَافِعُ الْحَقَائِقِ قَصَائِدِ جَعْفَرِ الصَّادِقِ يَاپَنْجَتَنْ بَجانَاونُمْ طَرَزْ

حَمْدًا لِلّٰهِ الْخَالِقْ، رَبِّ الْاَنَامِ الرَّازِقْ

اُهْدِيْ بِمَدْحِ الْفَائِقْ    لِاِمَامِ جَعْفَرْ صَادِقْ

சர்வ ஜீவாத்மாக்களை உற்பத்தி செய்து, அதற்கேதுவாய் உணவளித்து வளர்க்கும், மகா வல்லமையுள்ள அல்லாஹ் சுப்ஹானஹுவதஆலாவாகிறவன், இமாம் ஜஃபர் சாதிக் நாயகம் அவர்களின் திருப்புகழ் வாய்ந்த கஸீதா எனும் கவியை நான் கோர்வை செய்வதற்கு நேரிய நல்லுதவி தந்ததற்காக அவனை நான் புகழ்கிறேன்.

صَلَّى الْاِلٰهُ الْمَنَّانْ    عَلَى النَّبِيِّ الْفُرْقَانْ

وَالْاٰلِ اُوْلِى الْاِحْسَانْ    وَاِمَامِ جَعْفَرْ الصَّادِقْ

சர்வ ஜீவாத்மாக்களை உற்பத்தி செய்து, அதற்கேதுவாய் உணவளித்து வளர்க்கும், மகா வல்லமையுள்ள அல்லாஹ் சுப்ஹானஹுவதஆலாவாகிறவன், இமாம் ஜஃபர் சாதிக் நாயகம் அவர்களின் திருப்புகழ் வாய்ந்த கஸீதா எனும் கவியை நான் கோர்வை செய்வதற்கு நேரிய நல்லுதவி தந்ததற்காக அவனை நான் புகழ்கிறேன்.

ذَا اَشْرَفُ الْخَلَآئِقِ   ذَا اَعْلَمُ الْحَقَآئِقِ

ذَا اَفْهَمُ الدَّقَآئِقِ   اَلشَّيْخُ جَعْفَرْ صَادِقْ

ஷெய்கு ஜஃபர் சாதிக் நாயகமவர்கள் சர்வ படைப்புகளில் மகா சிறப்பும், சங்கையும் பொருந்தியவர்கள், அந்தரங்க கல்விகளையும் மோன நுட்ப மூலங்கள் எனும் நுணுக்கங்களையும் மிகவும் விளங்கி அறிந்தவர்கள்.

شَمْسُ الْعُلَى الْمُنَوَّرْ   بَدْرُ الدُّجَى الْمُقَمَّرْ

نُوْرُ الْهُدَيْ الْمُفْخَّرْ   اَعْنِيْ بِجَعْفَرْ صَادِقْ

இமாம் ஜஃபர் சாதிக் நாயகமவர்கள் பிரகாசம் ஜொலித்து இலங்கும் மேலான சூரியனுக்கு ஒப்பானவர்கள். இன்னும் ஜொலித்து இருளகற்றி நேர்மை துலக்கும் பூரண சந்திரனுக்கு ஒப்பானவர்கள். நேர்வழிக்கு உயரிய சன்மார்க்க நிலைமைகளை நிலைநிறுத்தி வைக்கும் ஒளிவுக்கு ஒப்பானவர்கள்.

حُسْنُ الْاَنَامِ خُلْقًا   صِدْقُ الْكَلَامِ وُثْقًا

بُرْءُ السَّقَامِ حَقًّا   عَظِّمْ بِجَعْفَرْ صَادِقْ

மனிதர்களில் அழகிய குணமும், வாக்கிய மொழிகளில் விசுவாச நாகரீக உண்மையும் பொருந்தினவர்கள். எவ்வித நோய்களும் உலகமக்களுக்கு வந்து சம்பவிக்காமல் அல்லாஹுத் தஆலாவின் உதவியைக் கொண்டே தடுத்து நற்சுகமடைய செய்கிறவர்கள். இவ்வித வர்ணிப்பு வாய்ந்த இமாம் ஜஃபர் சாதிக் நாயகமவர்களின் வல்ல மகிமையைப் பற்றி நான் என்ன சொல்வேன்..

ذَا ضَرْضَمٌ كَرِيْمٌ ذَا صِلْدِمٌ عَظِيْمٌ

ذَا ضَرْغَمٌ جَسِيْمٌ اَحْسِنْ بِجَعْفَرْ صَادِقْ

யுத்தம் புரிந்த ரணக்களத்தில் சளைக்காமல் வீரர்களை எதிர்த்து வெற்றியடையும் புலிக்கொப்பானவர்கள். மார்க்க விரோதிகளை சிங்கத்துக்கொப்பாய் கர்ஜித்து வதைத்தும், போர்க்களத்தில் வேங்கைபோல் பாய்ந்து வீரர்களை வதைத்தும் நல் வெற்றியடைகிறவர்கள். இவ்விதத் தத்துவம் தரித்துள்ள இமாம் ஜஃபர் சாதிக் நாயகமவர்களையும் அவர்களின் அழகிய மகிமையையும் பற்றி நான் என் சொல்வேன்.

صَمْصَامُنَا الْمُفَصَّلْ قَمْقَامُنَا الْمُكَمَّلْ

طَمْطَامُنَا الْمُبَذَّلْ اَكْرِمْ بِجَعْفَرْ صَادِقْ

அவர்கள் மகத்துவம் குடிக் கொண்ட வெற்றி நாயகர். நிரப்பமுள்ள சகலதுக்கும், போதிய தத்துவமுள்ள நாயகர். இன்னும் மிகுந்த கொடை கொடுக்கும் நீத நாயகர். இப்படி புகழ்பெற்ற இமாம் ஜஃபர் சாதிக் நாயகமவர்களின் சங்கை பற்றி நான் என் சொல்வேன்.

تَاجُ الشُّيُوْخِ الْاَمْجَدْ بَازُ الْقُلُوْبِ الْاَحْمَدْ

كَنْزُ الْعُلُوْمِ الْاَرْشَدْ اَعْظِمْ بِجَعْفَرْ صَادِقْ

அவர்கள் வலுப்பம் தங்கிய மகான்கள் எனும் ஷைய்குமார்களுக்கு நலமாகிய கிரீடத்தைப் போலும், புகழ் மிகுந்த ஞான இதயங்களின் இராஜாளியைப் போலும், மெஞ்ஞான கல்வியெனும் இல்முகட்கு நேரிய புதையலைப் போலும் வந்துதித்த இமாம் ஜஃபர் சாதிக் நாயகமவர்களின் வலுப்பத்தைப் பற்றி நான் என் சொல்வேன்.

نَجْلُ الْاِمَامِ الْاَكْبَرْ سَيِّدْ مُحَمَّدْ بَاقِرْ

قُرَّةُ طٰهَ الْاَنْوَرْ اَحْسِنْ بِجَعْفَرْ صَادِقْ

மகா வல்லமையும், சங்கையும் பொருந்திய செய்யிதினா முஹம்மது பாக்கர் நாயகம் அவர்களின் அருந்தவப் புதல்வராகவும் உலக நூராய் அமைந்த வள்ளல் தாஹா நபி முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மகவாய் வந்த கண்குளிர்ந்த வாழ்வாகவும், வந்துதித்த இமாம் ஜஃபர் சாதிக் நாயகமவர்களின் அழகு அமைந்த புகழைப்பற்றி என்னால் என்ன சொல்ல முடியும்.

مِنْ صُلْبِ اَسَدِ الْغَالِبْ حَيْدَرْ عَلِيِّ الْوَاهِبْ

حِفْدُ الْحُسَيْنِ الرَّقِبْ اَكْرِمْ بِجَعْفَرْ صَادِقْ

சிங்கத்தைப் போல் கர்ஜித்து யுத்தகளத்தில் வெற்றி அனுகூலத்தை நிலை நிறுத்திய நன்கொடையாளர் செய்யிதினா இமாம் ஹைதர் அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆண் சந்ததி வமிச கோத்திரத்தில் வந்துதித்த வள்ளல், அல்லாஹ்வின் சிந்தனையில் தன்னை பனாவாக்கி ஆத்மாவை அல்லாஹ்வுக்கே தத்தம் செய்து ஷஹீது பதசியை பெற்றோங்கிய செய்யிதினா இமாம் ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் அருமைப் புத்திரராய் வந்துதித்த இமாம் ஜஃபர் சாதிக் நாயகமவர்களின் சங்கையைப் பற்றி நான் என் சொல்வேன்.

مُوْفِيْ لِوَعْدٍ كَرَمًا مُحْيِيْ لِدِيْنٍ قِيَمًا

مُعْطِي الْجَوَادِ كِتْمًا اَعْظِمْ بِجَعْفَرْ صَادِقْ

வாக்குறுதியை சங்கையாக நிறைவேற்றி சன்மார்க்கத்தை நிலைக்கும்படியாய் உயிர் தழைக்கச் செய்து அல்லாஹுத்தஆலாவுக்காக இரகசிய கொடியை எப்பொழுதும் எடுத்தளித்தே வருகிற ஜஃபர் சாதிக் நாயகமவர்களின் வல்லமையைப் பற்றி நான் என் சொல்வேன்.

www.sufimanzil.org

اَوْلَى الْاَنَامِ نُقَبَا اَجْلَى الْكِرَامِ نَسَبَا

اَعْلَى الْمَقَامِ رُتَبَا اَكْرِمْ بِجَعْفَرْ صَادِقْ

உலகில் பாதுகாத்து உதவிபுரியும் மனிதர்களில் மகா பொறுப்பான பாதுகாவலர்கள், கீர்த்திப் பெற்ற வமிசத்தினர்களில் மகாவல்லமையும் உயர்வும் குடி கொண்டவர்கள், பதவி உயர்ந்த மேன்மை ஸ்தானங்களில் தகுதி உயர்வு பொருந்தியவர்கள். இவ்வித வர்ணிப்புகள் அமைந்த ஜஃபர் சாதிக் நாயகமவர்களின் வல்லமையைப் பற்றி நான் என் சொல்வேன்.

طَوَّاعُ اَمْرِ الرَّحْمٰنْ دَفَّاعُ شَرِّ الشَّيْطَانْ

وَعَّاظُ جَمْعِ الْاِنْسَانْ اَحْسِنْ بِجَعْفَرْ صَادِقْ

ஒப்பற்ற அருளாளனும், நிகரற்ற கொடையாளனுமாகிய அல்லாஹுதஆலாவின் உத்திரவிற்கு வழிபட்டு நற்றவம் செய்கிறவர்கள் காற்று, சம்பவம், துஷ்டதேவு, பிசாசு முதலியவைகளைத் துரத்தி அதன் கொடிய தீங்குகள் வந்தணுகாமல் கட்டி விலக்குகிறவர்கள் மானிட ஜன்மங்களுக்கு நன்மாராயமாக உபதேசித்து அல்லாஹ்வின் விதிவிலக்குகளை எடுத்துக் காட்டி நேரிய பாதைகளைக் காண்பிக்கும் இமாம் ஜஃபர் சாதிக் நாயகமவர்களுடைய அழகிய புகழை நான் என் சொல்வேன்.

لَاذُخْرَةَ سِوَي اللّٰه لَاذِكْرَهُ اِلَّا اللّٰه

لَاشَوْقَهُ غَيْرَ اللّٰه اَعْظِمْ بِجَعْفَرْ صَادِقْ

அவர்களின் தங்கரிப்பும் ஞாபக அறிவிப்பும் அவர்களின் பிரியமுள்ள ஆசையும் அல்லாஹுத்தஆலாவைத் தவிர வேறில்லையே அவ்விதமாகிய வல்லமைத் தரித்துள்ள இமாம் ஜஃபர் சாதிக் நாயகமவர்களின் வர்ணிப்பைப் பற்றி என்னால் எப்படி எடுத்துரைக்க இயலும்?

www.sufimanzil.org

طُوْلَ اللَّيَالِيْ قَائِمْ صَوْمَ النَّهَارِ صَائِمْ

ذِكْرَ الْخَفِيِّ دَائِمْ اَحْسِنْ بِجَعْفَرْ صَادِقْ

இரவு காலங்களில் இறைவனுக்காக அஞ்சிய நிலையில் நின்று தவம் செய்கிறவர்கள், பகல் காலங்களில் உபவாசம் விரதமெனும் நோன்பு வைக்கிறவர்கள் திக்ரு கஃபி எனும் இரகசிய திக்ரை நேமமாக செய்கிறவர்கள் இவ்வித தகுதி வாய்ந்த ஜஃபர் சாதிக் நாயகமவர்களின் வர்ணிப்பைப் பற்றி நான் என் சொல்வேன்!

مَاذَا دَعَى اِلَى الله قَدْ نَالَهُ مِنَ الله

اِذْ رَامَهُ لَدَي الله اَكْرِمْ بِجَعْفَرْ صَادِقْ

அல்லாஹ்விடம் தான் நாடியதைக் கேட்ட நேரத்தில் கேட்டபடிக்கே அல்லாஹ்வின் புறத்திலிருந்து திடனாக தானும் பெற்று உபயோகித்து, தன்னுடனிருக்கும் சிஷ்யர்களுக்கும் உபயோகிக்க கொடுத்து இஹ்ஸான் செய்கிறவர்கள் இவ்வித சங்கை பொருந்திய இமாம் ஜஃபர் சாதிக் நாயகமவர்களின் கீர்த்தியைப் பற்றி நான் என் சொல்வேன்.

இமாம் கைசு என்பவரின் மகளார் லைது என்பவர்கள் பேசி வருகிறார்கள்: நான் மக்காவில் ஹஜ்ஜு முடித்து அபூகுபைஸ் மலையில் தரித்திருந்தேன். ஹழ்ரத் இமாம் ஜஃபர் சாதிக் நாயகம் அவர்கள் அஸர் வேளையில் அங்கு தான் மட்டிலும் வந்து ஹக்கு சுப்ஹானஹூவத்தஆலாவிடம் கையை ஏந்தி தான் நோன்பாக இருப்பதால் தனக்கு நோன்பு திறப்பதற்காக "நாயகா! கொடி முந்திரிப்பழமும், வஸ்திரம் கிழிந்திருப்பதனால் இரண்டு உடையும் தாவென்று கேட்டார்கள். உடனே ஆகாயத்தில் இருந்து கேட்டபடிக்கு கொடிமுந்திரி பழமில்லாத காலமாயிருந்தும், அப்பழக் குலையும், உயர்ந்த உடை இரண்டும் இறங்கிற்று. நான் தாங்கள் கேட்ட துஆவிற்கு ஆமீன் கூறினேன் அல்லவா? எனக்கும் ஒரு உடை தாருங்கள் என்று கேட்டேன். எனக்கு பழமும் கொடுத்து, உடையும் கொடுத்தார்கள். அந்த பறக்கத்தினால் பெரும் பாக்கியம் பெற்றேன்" என்று சொன்னார்கள்.

كَمْ كَمْ مِّنَ الْكَرَامَةْ   ظَهَرَتْ بِهِ عَلَامَةْ

لِغِيَاثِنَا سَلَامَةْ   بِالشَّيْخِ جَعْفَرْ صَادِقْ

நம்மை ஈடேற்றி இரட்சிப்பு செய்வதற்காக எத்தனையோ புதுமையான கறாமத்துகள் செய்து ஜஃபர் சாதிக் நாயகம் அவர்களைக் கொண்டு அத்தாட்சி அடையாளமாக வெளியாகி விட்டது.

اِذْ مَا شَكَتْهُ عُدْمَا   زَوْجَةُ مَنْ غَابَ نَدْمَا

جُبِّيْ بِالْاٰلِ كَرَمَا   قَدْ قَالَ جَعْفَرْ صَادِقْ

திருமதீனா நகரில் விறகு ஒடித்து சுமந்து வியாபாரம் செய்து ஜீவனம் செய்து வரும் ஒரு வியாபாரி தனக்கு கிடைக்கும் பொருள், தன் குடும்ப செவிற்கு பத்தாமல் வெளியூர் போய் அவ்விடமும் கஷ்டம் ஏற்பட்டு 12 வருடகாலம் வரை மனைவி மக்கள்களுக்கு யாதொன்றும் அனுப்பாமல் சோம்பேறியாக தறித்துவிட்டார்.

அவரின் மனைவி கணவரின் நிலைமை தெரியாமல் கஷ்டப்பட்டு கூலிக்கு பாடுபட்டு, ஜீவனம் செய்து காலம் கழித்து வந்தவள் தன் கணவனின் நிலைமை தெரியாமல் இருப்பதைப் பற்றியும் தனக்கு சம்பவித்த வறுமை, கஷ்டத்தைப் பற்றியும் மனம் நொந்து கொண்டிருக்கும் வேளையில் செய்யிதினா இமாம் ஜஃபர் சாதிக் நாயகம் அவர்கள் அவ்வழியே தன் சீடர்களுடன் வந்து விட்டார்கள். அப்போது நாயகம் அவர்களிடம் அவள் தனது கணவரின் வறுமை நீங்கி மிகுதி பொருளுடன் வந்துஇ தனது கவலை நீங்க அருள்புரிய வேண்டும் என்று முறையிட்டு வேண்டிக் கொண்டார்.

அதை ஹழ்ரத் இமாம் ஜஃபர் சாதிக் நாயகம் ஞான திருஷ்டியினால் அறிந்து கொண்டு அன்னவரின் முறைப்பாட்டிற்கு மறுமொழி பின்வருமாறு சொல்கிறார்கள்: "இந்த மாதம் ரஜபு பிறை 22ம் தேதி அன்று யாராலுகிம் ஒருவர் பூரியான் எனும் பலகாரமாவது அல்லது வேறெந்த இனிமையாகிய பண்டமாவது ருசிகரமாக செய்து அதை ஒரு மண் குண்டா பாத்திரத்தில் வைத்து தன் இருப்பிடத்தை துப்புரவாக்கி அதில் அந்த மண் குண்டாவை வைத்து புஷ்பங்களும், பழவர்க்கங்களும் சம்பந்தப்படுத்தி சாம்பிராணி, ஊதுபத்தி, சந்தனக்கட்டை, அகர்கட்டை,

முதலியவைகளின் புகை வாசனையிட்டு மனப்பூர்வமாக பஞ்சத்தன்பாக்கு என்னும் ஐந்து பெரும் திருநாயகம் அதாவது எங்கள் பாட்டனார் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ஹழ்ரத் அலி ரழியல்லாஹு அன்ஹு, பர்த்திமா நாயகி ரழியல்லாஹு அன்ஹா, ஹழ்ரத் இமாம் ஹஸன், இமாம் ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹுமா ஆகிய இந்த ஐந்து திருப்பெயராலும் எமது பெயராலும் பாத்திஹாவை ஸலவாத்துடன் உகப்புடன் ஓதி தான் நாடிய நாட்டம் நிறைவேற வேண்டும் என்றும்

பொருள், செல்வம் என்னும் தவ்லத் கிடைக்க வேண்டும் என்றும், வறுமை நீங்கி விடவேண்டும் என்றும், வெளியூர் போய் வராதவர் புதையல் பொருளுடன் வரவேண்டும் என்றும் துஆ கேட்டால், கேட்டபடி பொருளும் கிடைக்கும். வெளியூர் போனவன் புதையல் பொருளுடன் வருவான். அப்படி நடக்காவிடில் என் மடியில் கைப்போட்டிழுத்து, கியாம நாளையில் நாயனிடம் சென்று இமாம் ஜஃபர் சாதிக் பொய் சொன்னாரென்று பங்கபடுத்தென்று தெரிவித்து ஹழ்ரத் இமாம் அவர்கள் போய் விட்டார்கள்.

وَكَذَا الثَّرِيْدَ صَنَعَتْ سَبْعَ الْمَثَانِ قَرَئَتْ

أَهْلَ الْعَبَاءِ قَصَدَتْ كَأَمْرِ جَعْفَرْ صَادِقْ

செய்யிதினா இமாம் ஜஃபர் சாதிக் நாயகம் அருளியபடி அந்த விறகு தூக்கி விற்பவரின் மனைவி நமக்கு நன்மாராயமான உத்திரவு இதுவேயென்று தன்னால் இயன்ற முறையில் சொற்பமாக பூரியான் செய்து பாத்திஹா, சலவாத் ஓதி கணவர் புதையல் பொருளுடன் வந்து சேர வேண்டுமென்று இருதய உருக்கத்துடன் துஆக் கேட்டாள்.

فَالزَّوْجُ نَالَ ذِكْرًا رَجَبًا تَضُمُّ حِرْزًا

فِيْهِ زِيَادٌ رُمِزَا بِجَاهِ جَعْفَرْ صَادِقْ

செய்யிதினா இமாம் ஜஃபர் சாதிக் நாயகம் அவர்களின் பொருட்டினால் அந்நிய ஊரில் சென்று, தரித்திரத்தில் சிக்கி சோம்பேறியாக இருந்த அவளது புருஷனுக்கு அன்றைய தினமே போன இடத்தில் புதையல் அகப்பட்டு அதைக் கைப்பற்றி தந்திரமாக

இடையில் வேண்டிய ஆடை, ஆபரணங்களை வாங்கிக் கொண்டு பெருமகிழ்ச்சியாக தன் ஊராகிய மதீனா ஷரீபுக்கு பொருள்களுடன் வந்து சேர்ந்து, தமக்கு பொருள் கிடைத்த விபரத்தையும், அதற்கு பிற ஊரில் தான் பட்ட கஷ்ட நிலைமைகளையும் ஆதிமுதல் அந்தம் வரை தன் மனைவியிடம் சொன்னார். பெண்சாதியும் தனக்கு நடந்ததைச் சொல்லி இருவரும் கலந்து இனி எப்போதும் ஹழ்ரத் உத்திரவின்படி வருடாவருடம் பாத்திஹா ஓதி வரலாமென்று தீர்மானித்து, மகிழ்ச்சியடைந்து சுகித்து வாழ்ந்தார்கள்.

وَرَدَ الْوَزِيْرَحَدَثَانِ  بِوُجُوْدِ الْاَهْلِ لَوُمَانُ

قَدْ فَازَ بَعْدَ الْعَفْوَانُ  بِاَمَانِ جَعْفَرْ صَادِقْ

அந்த மதீனா ஷரீப் அமீரின் பெரிய மந்திரியின் மனைவி விறகு ஒடித்து விற்பனை செய்தவரின் பெண்சாதி செல்வசீமாட்டியாக வாழ்ந்து வருவதையும், சில காலமாக தன் வீட்டிற்கு வராமல் இருப்பதையும் தெரிந்து அவள் வீட்டிற்கு தூதனுப்பி அழைத்தாள். மேலும் அவளது புருஷன் கிடைத்தது பற்றியும், அவளுக்கு செல்வம் வந்தது பற்றியும் கேட்டாள். அதற்கு அந்த விறகு வெட்டி விற்பனை செய்பவரின் மனைவிஅ பின்வருமாறு சொல்கிறாள்: ரஜப் மாதம் 22 ம் தேதி அன்று வாசல் முகப்பில் ஹழ்ரத் இமாம் ஜ.்பர் சாதிக் நாயகத்தை சீடர்களுடன் சந்தித்து, எனது புருஷன் சபர் போய் 12 வருடமாகியும் இன்னும் வரவில்லை என்றும், அதனால் நானும் எனது பிள்ளைகளும் கஷ்டப்படுவதையும், எனது பருவமெய்திய பிள்ளைக்கு திருமணம் செய்வதற்கு தேவையான பொருட்களுடன் எனது கணவர் தங்கள் பொருட்டினால் ஊர் வந்து சேர்ந்து எனது கஷ்டங்கள் தீர வேண்டுமென்று மன்றாடி கேட்டுக் கொண்டேன்.

அதற்கு ஹழ்ரத் அவர்கள் சில முறைகளை செய்ய சொன்னார்கள். அதன்படி செய்தேன். எனது கணவர் நான் நினைத்தபடி செல்வத்துடன் வந்து சேர்ந்தார். எல்லாம் ஹழ்ரத் அவர்களின் துஆ பரகத்தினால் உண்டானது என்றாள்.

அதற்கு அந்த மந்திரியின் மனைவி அந்த ஜ.்பர் என்னும் பரதேசி ஞானியானவர் என்னுடைய பேச்சைக் கேட்கும் எளிய பகீருக்கு சமமானவர். அவருக்கு அவ்வளவு தத்துவ மகிமை எங்கிருந்து வந்தது? அப்படியல்ல! உனது கணவர் போன இடத்தில் அன்னியருடைய பொருளை திருடிக் கொள்ள நாடி மோசடியாக வந்த பணத்தைப் பற்றி என்னிடம் அகப்பெருமை பேசாதே. சீ! தூரப்போ. என்று துரத்தி விட்டாள்.

இதனால் விறகு வெட்டியின் மனைவி மனம் குன்றி, பெருமூச்செறிந்து ஹழ்ரத் நாயகம் அவர்களை நீ இலேசாக கண்டதற்கு கூடிய சீக்கிரம் உனக்கு கேடு வந்து சம்பவிக்கும் என்று சொல்லி தனது வீட்டிற்கு வந்து விட்டாள். விறகு வியாபாரியின் மனைவியின் சொல்படி அவளின் புருஷன் மந்திரியின் பேரில் பொறாமைக் காரர்களினால் அமீரிடம் எடுத்துரைக்கப்பட்ட தப்பபிப்பிராயங்களை அமீர் அங்கீகரித்து மோசக்காரர்கள் என்று தீர்மானித்து பெண்சாதி புருஷன் இருவரையும் சிறையில் வைத்து விட்டான்.

அவ்விருவர்களும் அதிக கஷ்டநிலைமைக்கு ஆளாகி ஒருத்தொருக்கொருத்தர் கலந்து ஜஃபர் சாதிக் நாயகத்தை இழிவாகப் பேசியதால் வந்த சோதனை இது என்று அறிந்து, தாம் செய்தது தப்பு என்று தவ்பா மன்னிப்பு தேடிய பிறகு அமீருக்கு உண்மை தெரிந்து சிறையை விட்டும் அவ்விருவரையும் விடுதலை செய்தார். அம் மந்திரியும் பூரியான் முதலியவைகளை செய்து கொண்டாடி மீட்சிப் பெற்று மந்திரி பதவி அடைந்து சுகமடைந்தார்.

ذَاقَ شَهِيْدَ الْاَسْعَدُ رَجَبًا بِحَيِّ الْاَبْجَدُ

فِىْ عَامِ يُمْنِ الْاَزْهَدُ اَلشَّيْخُ جَعْفَرُ صَادِقُ

ஹழ்ரத் ஜஃபர் சாதிக் நாயகமவர்கள் ஹக்கிலே காதல் கொண்டு ஆத்மாவை தத்தம் செய்து அழியுண்டுதலென்னும் ஷஹீது பதவியை ஹிஜ்ரி 148 ஆம் ஆண்டு ரஜப் மாதம் அடைந்து வபாத்தானார்கள். அவர்களை சிறந்த மதீனமா நகரில் ஜன்னத்துல் பஃகியில் நல்லடக்கம் செய்யப்பட்டு அங்கு ஜியாரத் நடந்தேறி வருகிறது.

يَا رَبَّنَا رِحِيْمًا فَاغْفِرْ لَنَا دَوَامًا

اَسْعِدْ لَنَا خِتَامًا بِجَاهِ جَعْفَرُ صَادِقُ

எங்களுக்கு நற்கருணை அருள்புரிந்து எங்களை வளர்க்கின்ற வல்ல நாயகா! செய்யிதினா இமாம் ஜஃபர் சாதிக் நாயகம் அவர்களின் பொருட்டினால் எங்களின் பாவங்கள் அனைத்தும் மன்னித்துப் பொறுத்து எங்களின் முடிவைக் கலிமாவுடன் கரைசேர்க்குதல் என்னும் சீதேவித்தன முடிவாக அமைத்து அருள்வாயாக. ஆமீன்.

وَارْزُقْ لَهُ الْوَسِيْلَة وَالدَّرَجَةَ الْفَضِيْلَة

وَالشَّرْفَةَ الْجَبِيْلَة لِاِمَامِ جَعْفَرْ صَادِقْ

நாயகா! இன்னும் செய்யிதினா இமாம் ஜஃபர் சாதிக் நாயகம் அவர்களுக்கு எங்களை மன்றாடி நற்பதவியில் சேர்த்துவைக்கும் வசீலாவென்னும் பதவியையும் வரிசையையும் சிறந்த மகிமையையும் கொடுத்து அருள்வாயாக! ஆமீன்.

وَرَضِّيَنْهُ رَضِيَا اَسْكِنْهُ دَارَعُلْيَا

لُقْيَاكَ اتِ صَفْيَا لِاِمَامِ جَعْفَرْ صَادِقْ

இன்னும் நாயகம் இமாம் ஜஃபர் சாதிக் நாயகமவர்களுக்கு துலங்கியிலங்கும் உனது சங்கைப் பொருந்திய லிகாவென்னும் சந்திப்பைக் கொடுத்து ஜன்னத்தென்னும் சுவர்க்கமதில் குடியிருத்தாட்டி அன்னாரை நீ பொருந்திக் கொள்வாயாக! ஆமீன்.

فَاغْفِرْ ذُنُوْبَ نَانَا صَاحِبْ اَيَا رَحْمَانَا

وَارْزُقْ لَهُ عِرْفَانَا بِجَاهِ جَعْفَرْ صَادِقْ

அருள் புரியும் நாயகா! இமாம் ஜஃபர் சாதிக் நாயகம் அவர்களின் மகிமைப் பொருட்டைக் கொண்டு இந்த கஸீதாவை கோர்வை செய்த நானா சாகிப் என்பவரின் பிழைகளைப் பொறுத்து கிருபை செய்து உன்னை அறிந்து தரிசிக்கும் இர்ஃபானை கொடுத்தருள்வாயாக. ஆமீன்.

اَزْكَى الصَّلَوةِ الْاَجْسَمْ عَلَى الرَّءُوْفِ الْاَكْرَمْ

وَالْاٰلِ حِزْبِ الْاَعْظَمْ وَاِمَامِ جَعْفَرْ صَادِقْ

மகா வலுப்பமுள்ள தூய சலவாத்தாகிறது மகா சங்கையும், கொடையும் இரக்கமும் பொருந்தியமைந்த குணதயாளர் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அவர்களின் கிளை, கோத்திரர்கள் யாவர் மீதும், செய்யிதினா இமாம் ஜஃபர் சாதிக் நாயகம் அவர்களின் மீதும் உண்டாவதாக. ஆமீன்.

رَضِيَ اللهُ عَنْهُ الرَّازِقُ رَضِيَ اللهُ عَنْهُ الْخَالِقُ

رَضِيَ اللهُ عَنْهُ الْخَالِقُ مَوْلٰـئَنَا جَعْفَرْ صَادِقُ

இதுவாகிறது செய்யிதினா இமாம் ஜஃபர் சாதிக் நாயகம் அவர்களின் திரு பேரால் வசீலா தேடி ஓதும் கஸீதாவாயிருக்கும். இந்த கஸீதாவை ஓதுகையில் ஹாழிராக இருப்பவர்கள் இதை ஓதுவது நலமாயிருக்கும்.

يَا اِمَامُ كُلِّ فَائِقُ يَا اِمَامُ كُلِّ وَاثِقُ

عَنْكُمْ رِضَاءُ الْخَالِقُ مَوْلَانَا جَعْفَرْ صَادِقُ

தவம் புரிந்த உயர்பதவி பெற்றவர்களுக்கு எல்லாம் முன்னிலையான இமாமாகவும், விசுவாசம் பெற்ற மகான்களுக்கெல்லாம் முக்கிய தைரிய அதிபதியாகவும் வந்துதித்த எஜமான் இமாம் ஜஃபர் சாதிக் நாயகமே! சர்வ படைப்புகளையும் உற்பத்தி செய்த நாயன் அல்லாஹுத் தஆலாவின் பொருந்துதல் தங்களைத் தொட்டும் உண்டாவதாக!

يَا نَجِيْلَ الْبَاقِرِيِّ نُوْرَ عَيْنَيِ الْعَلِيِّ

اِتِنَا قَلْبَ الصَّفِيِّ شَيْخَنَا جَعْفَرْ صَادِقُ

செய்யிதினா இமாம் முஹம்மது பாக்கர் நாயகம் அவர்களின் அருந்தவப் புதல்வரே! அல்லாஹுத் தஆலாவின் அர்ஷுப் புலி அலி கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்களின் இரு கண் குளிர்ந்த ஒளியே! எங்களுக்கும் ஷெய்காகிய இமாம் ஜஃபர்

சாதிக் நாயகமே! எங்களுக்கு நாயனின் தரிசனை வெளியாகி தரிசிக்க தெளிவான இருதயக் கல்பை கொடுத்தருளுங்கள்.

يَاأَمَانَ الْهَالِكِيْنَا يَارَجَاءَ الْعَاثِرِيْنَا

دُمْ لَنَا حِرْزًا أَمِيْنَا غَوْثَنَا جَعْفَرْ صَادِقْ

எங்களை மோசநாசம் செய்பவரின் தீங்குள் வந்தணுகாமல் பாதுகாக்கும் விசுவாச அதிபதியே! சறுக்கி தடுமாறி விழுபவர்கள் அபாயமின்றிக் காப்பதற்கு ஆதரவு வைக்கும் எங்கள் இரட்சகர் இமாம் ஜஃபர் சாதிக் நாயகமே! விசுவாசமாக எங்களுடைய எந்தக் காரியத்திலும் நேமமாக பாதுகாத்தருளுங்கள்.

كُنْتَ رَأْسَ الْأَوْلِيَآءِ صِرْتَ تَاجَ الْأَصْفِيَآءِ

فَاكْفِنَا سُوْءَ الْقَضَآءِ رُشْدَنَا جَعْفَرْ صَادِقْ

எங்களுக்கு நேர்வழியைக் காட்டுவதற்கு முன்வந்த ஜஃபர் சாதிக் நாயகமே! தாங்கள் மகிமைத் தங்கிய அவ்லியாக்களுக்கெல்லாம் தளநாயகராகவும் இன்னும் கல்பு தெளிந்த அகப் பார்வையை உடையவர்களுக்கு கிரீட அதிபதியாகவும் ஆகி விட்டீர்கள். ஆகையால் எங்களுக்கு திடும்பிரவேசமாக வந்து சம்பவிக்கும் கெட்ட விதியை நீக்கி வையுங்கள்.

أَنْتَ حَامٍ لِلْأَنَامِ أَنْتَ قَاضٍ لِلْمَرَامِ

كُنْ لَنَا بُرْءَ السَّقَامِ فَوْزَنَا جَعْفَرْ صَادِقْ

எங்கள் ஜெய அனுசுல சீலராகிய இமாம் ஜஃபர் சாதிக் நாயகமே! நீங்கள் மனிதர்களைப் பாதுகாக்கிற பொறுப்பாளராகவும், நாடும் நாட்டங்களை இறைவனிடம் மன்றாடி நிறைவேற்றி வைப்பவர்களாகவும் இருக்கிறீர்கள். எங்களுக்கு வந்து சம்பவிக்கும் எவ்வித நோய்களும் வந்தணுகாமல் காப்பாற்றுங்கள்.

مَدْحُكُمْ صَفْوُ الْفُؤَادِ وَصْفُكُمْ فَتْحُ الرَّشَادِ

اٰتِنَا حُسْنَ الْجَوَادِ كَنْزَنَا جَعْفَرْ صَادِقْ

எங்களுக்கு வாழ்வு புதையலாகிய இமாம் ஜஃபர் சாதிக் நாயகமே! தங்களது மத்ஹென்னும் புகழாகிறது இருதயத்திற்கு தெளிவாகவும் தங்களை வர்ணிப்பதானது நேர்வழி பெறுவதற்கு திறவுகோலாகவும் இருக்கின்றன. ஆகையால் எங்களுக்கு அழகிய நன்கொடையை எடுத்தளியுங்கள்.

يَا اِلٰهِيْ وَعْفُ عَنَّا كُلَّ وَقْتٍ مَا جَنَيْنَا

وَافْتَحَنَّا وَانْصُرَنَّا بِيُمْنِ جَعْفَرْ صَادِقْ

நாயகா! செய்யிதினா இமாம் ஜஃபர் சாதிக் நாயகமவர்களின் மகிமை பரக்கத்தைக் கொண்டு ஒவ்வொரு வேளைகளிலும் எங்களுக்கு சம்பவிக்கும் பாவமடங்கலையம் மன்னித்து எங்களின் இருதயத்தை உனது மஃரிபாவென்னும் நூரைக் கொண்டு தரிப்புடையதாக்கி வைத்து உனது தரிசனை என்னும் லிகாவை எங்களுக்கு கொடுத்து நல்லுதவி புரிவாயாக! ஆமீன்.

وَاقْضِنَا كُلَّ الْمُرَادِ اَعْطِنَا خَتْمَ السَّعَادِ

قِنْ لَنَا يَوْمَ الْمَعَاد بِمَدَدْ جَعْفَرْ صَادِقْ

இன்னும் செய்யிதினா இமாம் ஜஃபர் சாதிக் நாயகமவர்களின் உதவியைக் கொண்டு நாயகா நாங்கள் நாடிய நாட்டங்கள் அனைத்தையும் நிறைவேற்றி முடிவில் கலிமாவோடு கரைசேர்க்குதலெனும் சீதேவிதன முடிவை எங்களுக்கு கொடுத்து மேலும் கியாம நாளில் எங்களுக்கு அதாபு அணுகாமல் காப்பாற்றியருள்.

وَاغْفِرَنْ لِذِي النِّظَامِ دَسْتَكِيرْبَعْدَ الْغُلَامِ

اَدْخِلْهُ دَارَ السَّلَامِ بِعِزِّجَعْفَرْ صَادِقْ

நாயகா: செய்யிதினா இமாம் ஜஃபர் சாதிக் நாயகமவர்களின் சங்கை சிறப்பு பொருட்டைக் கொண்டு இதனைக் கோர்வை செய்த குலாம் தஸ்தகீர் சாகிப் எனும் பாவி அடியானுடைய பிழைகள் அனைத்தையும் பொறுத்து சலாமத்தான வீடெனும் சுவனப்பதியில் சேர்த்து வைத்து உனது தரிசிப்பெனும் லிகாவைக் கொடுத்தருள் ஆமீன்.

فَيْضُ صَلَاةِ الْكَمَالِ لِلْمُصْطَفَى ذِي النَّوَالِ

وَالْاٰلِ اَهْلِ الْجَلَالِ وَالشَّيْخِ جَعْفَرْ صَادِقْ

அருள் தங்கிய நிரப்பமுள்ள சலவாத்தானது மேன்மை குடி கொண்ட வள்ளல் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும்இ அவர்களின் வலுப்பம் தரித்துள்ள கிளைக் கோத்திரத்தார் அனைவர்கள் மீதும் ஷெய்கு இமாம் ஜஃபர் சாதிக் நாயகமவர்கள் மீதுமத் உண்டாவதாக. ஆமீன்.

மகிமை தங்கிய செய்யிதுல் அவ்லியா வ தாஜுல் அஸபியா செய்யிதனா அல்இமாம் ஜஃபர் சாதிக் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹிஜ்ரத் 80 ஆம் ஆண்டு ரபியுல் அவ்வல் மாதம் பிறை 13 திங்கள் கிழமை மதினா முனவ்வராவில் பிறந்தார்கள். ஹிஜ்ரி 148 ஆம் ஆண்டு ரஜப் மாதம் பிறை 15 திங்கள் கிழமை வபாத்தாகி தாருல் பகா அளவில் சேர்ந்தார்கள். அவர்களின் புனித உடல் மதீனா முனவ்வரா ஜன்னத்துல் பஃகீ மக்பராவில் நல்லடக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

**செய்யிதினா இமாம் ஜஃபர் சாதிக் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் மவ்லிது நிறைவு துஆ**

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ.

اَللّٰهُمَّ لَكَ الْحَمْدُ وَلَكَ الشُّكْرُ يَااَللهُ يَامَلِكُ يَاسُلْطَانُ، يَاوَهَّابُ يَاذَا الْمَنِّ بِالْعَدْلِ وَالْاِحْسَانْ، اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلٰى سَيِّدِ الْخَلَائِقِ وَالْجَانْ وَبَارِكْ عَلَى سَيِّدِ الْخَلَائِقِ وَالْجَانْ،وَبَارِكْ عَلَى سَيِّدِنَا وَمَوْلَانَا مُحَمَّدٍ وَّعَلَى اٰلِهِ وَصَحْبِهِ وَعِتْرَتِهِ وَدَامَ تَكَرَّرَ الْجَدِيْدَانْ،اَللّٰهُمَّ يَانُوْرُ تَنَوَّرْتَ بِالنُّوْرِ وَالنُّوْرُ فِيْ نُوْرِ نُوْرِكَ يَانُوْرُ وَنَوِّرْ فُؤَادَنَا بِنُوْرِ الْحِكْمَةِ وَالْعِرْفَانْ، اَللّٰهُمَّ يَارَزَّاقُ تَرَزَّقْتَ بِالرِّزْقِ وَالرِّزْقُ فِيْ رِزْقِ رِزْقِكَ يَارَزَّاقُ وَسِّعْ اَرْزَاقَنَا بِغَيْرِ حُسْبَانْ، اَللّٰهُمَّ يَاسَلَامُ تَسَلَّمْتَ بِالسَّلَامَةِ وَالسَّلَامَةُ فِيْ سَلَامَةِ سَلَامَتِكَ يَاسَلَامُ سَلِّمْنَا مِنَ الْمُصِيْبَاتِ وَشَرِّ الزَّمَانِ وَكَيْدِ الشَّيْطَانِ،اَللّٰهُمَّ يَارَحْمٰنُ تَرَحَّمْتَ بِالرَّحْمَةِ وَالرَّحْمَةُ فِيْ رَحْمَةِ رَحْمَتِكَ يَارَحْمٰنُ اِرْحَمْنَا بِرَحْمَتِكَ يَارَحْمَانُ، اَللّٰهُمَّ يَافَتَّاحُ تَفَتَّحْتَ بِالْفَتْحِ وَالْفَتْحُ فِيْ فَتْحِ فَتْحِكَ يَافَتَّاحُ اِفْتَحْ عَلَيْنَا اَبْوَابَ بِرِّكَ وَفَضْلِكَ

مَعَ الْاِحْسَانْ، اَللّٰهُمَّ يَاعَلِيْمُ تَعَلَّمْتَ بِالْعِلْمِ وَالْعِلْمُ فِيْ عِلْمِ عِلْمِكَ يَاعَلِيْمُ

اُرْزُقْنَا عِلْمَ التَّوْحِيْدِ وَعَمَلَ الْاِخْلَاصِ وَسَلَامَةَ الْاِيْمَانِ، اَللّٰهُمَّ يَاعَزِيْزُ تَعَزَّزْتَ

بِالْعِزَّةِ وَالْعِزَّةُ فِيْ عِزَّةِ عِزَّتِكَ يَاعَزِيْزُ عَزِّزْ اٰجَالَنَا بِلِقَائِكَ السُّعْدَانْ، اَللّٰهُمَّ يَاكَرِيْمُ

تَكَرَّمْتَ بِالْكَرَمِ وَالْكَرَمُ فِيْ كَرَمِكَ يَاكَرِيْمُ اَكْرِمْ بِانْقِضَاءِ حَوَائِجَنَا بِعَظِيْمِ

الشَّانِ بَلِّغِ اَللّٰهُمَّ ثَوَابَ مَاقَرَأْنَاهُ وَمَا صَلَّيْنَاهُ وَمَا اَنْشَدْنَاهُ مِنْ قَصَائِدِ

اَوْلِيَائِكَ الرِّضْوَانْ، هٰذِهِ هَدِيَّةً وَّاصِلَةً وَّرَحْمَةً نَازِلَةً مَقْبُوْلَةً مِّنَّا اِلٰى حَضْرَةِ النَّبِيِّ

الْاَكْرَمْ، سَيِّدِ الْعَرَبِ وَالْعَجَمِ، مِنْ اٰلِ هَاشِمْ، دَافِعِ الْبَلَاءِ وَالْوَبَاءِ وَالْقَحْطِ

وَالْاَلَمِ سَيِّدِنَا وَمَوْلَانَا مُحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمْ، ثُمَّ اِلَى جَمِيْعِ الْاٰلِ

وَالْاَصْحَابِ وَالْاَتْبَاعِ وَالْحِزْبِ الْاَعْظَمْ، ثُمَّ اِلٰى حَضْرَةِ تَاجِ الْاِمَامِ الْهُمَامِ، خَيْرِ

الْاَنَامِ مِصْبَاحِ الظَّلَامِ مُحْيِ السُّنَّةِ وَالْاِسْلَامِ، مَلْجَآءِ اَهْلِ الْمَكَابِرِ وَالْكِرَامِ

مَوْلَانَا سَيِّدِ الْخَلَائِقِ، اَلْمُنْتَهِيْ فِيْ عُلُوْمِ الدَّقَائِقِ، اَلْمُرْتَضِيْ عِنْدَ اللّٰهِ الْخَالِقِ،

اَلسَّيِّدِ الْاِمَامِ جَعْفَرُ الصَّادِقِ، وَارْزُقِ اللّٰهُمَّ لَنَا وَلِجَمَاعَةِ الْحَاضِرِيْنَ، رِزْقًا

وَّاسِعًا وَّدَوْلَةً غَنِيًّا وَّعِلْمًا نَافِعًا وَّعَمَلًا مُتَقَبَّلًا وَّدُعَاءً مُسْتَجَابًا وَّفَتْحًا قَرِيْبًا

وَّصَبْرًا جَمِيْلًا وَالْعَافِيَةَ مِنْ جَمِيْعِ الْبَلَآءِ يَارَبَّ الْعَالَمِيْنَ، اَللّٰهُمَّ لَاتَدَعْ لَنَا فِيْ
مَقَامِنَا هٰذَا ذَنْبًا اِلَّا غَفَرْتَهٗ وَلَاعَيْبًا اِلَّا سَتَرْتَهٗ وَلَاهَمًّا اِلَّا فَرَّجْتَهٗ وَلَا خَوْفًا اِلَّا
كَشَفْتَهٗ وَلَا سَقَمًا اِلَّا فَرَّجْتَهٗ وَلَا خَوْفًا اِلَّا كَشَفْتَهٗ وَلَا سَقَمًا اِلَّا شَفَيْتَهٗ وَلَا دَيْنًا اِلَّا
اَدَّيْتَهٗ وَلَا سَائِلًا اِلَّا اَجَبْتَهٗ وَلَا حَاجَةً مِنْ حَوَائِجِ الدُّنْيَا وَالْاٰخِرَةِ اِلَّا قَضَيْتَهَا وَلَا
بَلَاءَ اِلَّا بَرَاءْتَهَا يَارَبَّ الْعَالَمِيْنَ، فَتَقَبَّلْ دُعَائَنَا بِحُرْمَةِ النَّبِيِّ الْمُصْطَفٰى سَيِّدِ
الْمُرْسَلِيْنَ وَبِحُرْمَةِ اٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ، وَبِحُرْمَةِ سَيِّدِنَا جَعْفَرِ الصَّادِقِ
الْاَمِيْنَ، بِرَحْمَتِكَ يَااَرْحَمَ الرَّاحِمِيْنَ، وَاَفْضَلُ الصَّلَوَاتِ وَاَتَمُّ التَّسْلِيْمَاتِ عَلٰى
سَيِّدِنَا وَنَبِيِّنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَاَصْحَابِهٖ وَعِتْرَتِهٖ وَعَشِيْرَتِهٖ كُلِّهِمْ اَجْمَعِيْنَ، سُبْحَانَ
رَبِّكَ رَبِّ الْعِزَّةِ عَمَّا يَصِفُوْنَ، وَسَلَامٌ عَلَى الْمُرْسَلِيْنَ، وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ.

www.sufimanzil.org